<u>செய்தி வெளியீடு எண். 487</u> <u>நாள்.27.6.2008</u>

<u>செய்தி வெளியீடு</u>

**<u>மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூபாய் 100 கோடி செலவில் உருவாக்கப்பட்டுவரும் அடையாறு பூங்கா பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.</u>**

10.8.2007 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ரூ.100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் உருவாக்கப்படும் அடையாறு பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார்கள். பூங்கா அமைக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருவதை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (27.6.2008) பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அடையாறு பகுதியில் அடையாறு கிரீக் என்னும் சிற்றோடையில் 58 ஏக்கர் நிலப்பரப்பில் 1997 முதல் அடையாறு பூங்கா எனும் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்க தமிழக அரசு ஆலோசித்து வந்தது. இப்பகுதியை ரூபாய் 50 கோடி செலவில் மேம்படுத்த 2005 நவம்பர் மாதம் ஆணையிட்டது. தொடர்ந்து சுற்றுச்சூழல் தாக்கத்தை உணர்ந்து அடையாறு ஓடை மற்றும் முகத்துவராரத்தை (358 ஏக்கர்) மறுசீரமைக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 11.10.2006 அன்று ஆணை வெளியிட்டது. இதற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவை பராமரிக்க தலைமைச் செயலாளர் தலைமையில், "அடையாறு பூங்கா பொருட்காட்சிக் குழு" நிறுவப்பட்டது. இப்பொருட்காட்சிக் குழு ஒரு சிறப்பு நோக்க நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் தேவையான பணிகளை நிறைவேற்றும். "அடையாறு பூங்கா லிமிடெட்" என்ற பெயரில் கம்பெனிகள் சட்டப் பிரிவின் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 10.3.2008ல் ஆணையிட்டு நிறுவனத்தை அமைத்துள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள் கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் அடையாறு பூங்காவை உருவாக்குவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்கவும், சில முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதிகாரம் அளிக்கப்பட்டு, நிதி ஆலோசகராக அந்நிறுவனத்தை அரசு நியமித்துள்ளது. 58 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய உள்ள பூங்காவின் பணிகளை ஆரோவில்லில் அமைந்துள்ள திருவாளர்.பிச்சாண்டிகுளம் காடு வளர்ப்பு ஆலோசனை நிறுவனம், அடையாறு பூங்காவில் 19 கோடியே 72 லட்சத்திற்கு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தம் போடப்பட்டு, 2.6.2008 முதல் அந்நிறுவனம் பணிகளை செய்து வருகிறது. இப்பணிகளை நாள்தோறும் மேற்பார்வை செய்ய M/s.Inmaas Ltd. என்ற நிறுவனம் திட்ட மேலாண்மை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இதுவரை கற்பகம் பாலத்தில் முழுவதுமாக வேலிகள் நிறுவப்பட்டு, நடைபாதைகள் சீரமைக்கப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் பற்றிய கல்வி மையம் உருவாக்க விரிவான ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

நுகர்வோர் நடவடிக்கைக் குழு (Consumer Action Group) என்ற பெயரில் இத்திட்ட செயல்பாடு தொடர்பாக **1993** ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதையொட்டி இப்பகுதியில் பணிகள் எதுவும் மேற்கொள்ளக்கூடாது என்று **9.3.1994**ல் உயர்நீதிமன்றம் தடை விதித்தது. இத்திட்டம் சுற்றுச்சூழலை சீரமைக்கும் திட்டம் என எடுத்துரைத்து அரசு சார்பில் **25.6.2007**ல் மனுதாக்கல் செய்யப்பட்டதின் அடிப்படையில் அடையாறு பூங்கா உருவாக்க பணிகளை நடத்த, உயர்நீதிமன்றம் அனுமதி அளித்தது. **2.1.2008** அன்று உயர்நீதிமன்றம் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் அடங்கிய திட்ட கண்காணிப்புக் குழு ஏற்படுத்த ஆணையிட்டது. அவ்வாணையின்படி கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டது. அக்கண்காணிப்புக் குழுவில் அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி சேவை நிறுவனம், மேலாண்மை இயக்குநர், சென்னை குடிநீர் வாரியம், ஆணையர், சென்னை மாநகராட்சி, தலைமை வனப் பாதுகாவலர், சுற்றுச்சூழல் துறை இயக்குநர், தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை மண்டலம், திரு.ராம்குமார், வழக்கறிஞர், Exnora, பரத் ஜெய்ராஜ், சிட்டிசன் கன்ஸ்யூமர் மற்றும் சிவில் ஆக்ஸன் குரூப், திருமதி.சுதா ரவி, சென்னை சுற்றுச்சூழல் கழகம், ரஜ்சித் டேனியல், கேர் எர்த் ஆகியோர் உள்ளனர்.

எஞ்சிய **300** ஏக்கருக்கான பணிகள் தொடர்பான வரைவு திட்டத்தை உருவாக்க M/s.ஐ.எல். & எப்.எஸ். ஈக்கோ ஸ்மார்ட் நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் **9.6.2008** முதல் தொடங்கப்பட்டுள்ளன.

அடையாறு பூங்காவில் அரிய வகை தாவர இனங்கள், விலங்கினங்கள் வளர்க்கப்படும். சுற்றுப்புறச்சூழல் கல்வி நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு மற்றும் ஆதரித்து வழக்காடல் நிகழ்ச்சிகள் இப்பூங்காவில் நடத்தப்படும். சுற்றுப்புறச்சூழலை விளக்க நடமாடும் கல்வி கண்காட்சி “அடையாறு பூங்கா பேருந்து” என்ற பெயரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. உயிர் மாறுபாட்டை புதுப்பித்தல், ஈரநிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்களை உருவாக்குதல், கடற்கரை ஈர நிலங்களுடன் பூங்காவை ஒருங்கிணைத்தல், வறண்ட மண்டலப் பசுமை மாறாக் காடுகளை உருவாக்குதல், குன்றுகள், புல்வெளி பிரதேசங்கள், குளங்கள், உப்புநீர் வாழ்க்கை முறை ஆகியவை இப்பூங்காவில் உருவாக்கப்பட உள்ளன.

சென்னை மாநகரத்திற்குச் சிறந்த மற்றும் வாழ்க்கை முழுவதும் நீடித்திருக்கும் சூழ்நிலைக் கல்வி, நிலைத்திருக்கும் தன்மை, சுற்றுப்புறக் கல்வியினை வழங்குவதும் மற்றும் அடையாறு சமவெளிப் பகுதியின் சூழ்நிலை மண்டலத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கும், பாதுகாப்பதற்குமானப் பணியில் அடையாறுப் பூங்காவின் பார்வையாளர்கள் மற்றும் உள்ளூர் சமுதாய மக்களையும் ஈடுபட வைப்பதும் அடையாறு பூங்காவை உருவாக்கும் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திரு.தீனபந்து, இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளர்ச்சித் துறை செயலாளர் செல்வி.லீனா நாயர், இ.ஆ.ப. தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர்,இ.ஆ.ப., ஒப்பந்ததாரர் குழு அலுவலர்கள், திட்ட மேலாண்மை ஆலோசகர்களுடன் கலந்தாய்வு செய்தும், வேலைகளை மேற்பார்வையிட்டு, வேலைகள் காலதாமதமின்றி முடியவும், நல்ல தரம் வாய்ந்தததாக அமையவும் அறிவுரைகளை வழங்கினார்கள்.

அடையாறு பூங்கா பொறுப்பாட்சிக் குழு, முதல் தளம், வைரம் காம்ப்ளக்ஸ், 112 தியாகராயா சாலை, தி.நகர், சென்னை–600 017. (தொலைபேசி எண்.044–28153103, 2815 3104, 2815 3105. தொலைநகல்: 044–2815 3106 இணையதளம்: www.adyarpoonga.com ) என்ற முகவரியில் இயங்கி வருகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9